**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 24/2021 |
| Name | : Vasudevan |
| P.W. | : 4 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.09.2025

**1ம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**2ம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSSன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது உடுமலைப்பேட்டை கோகுல் பாலிகிளினிக்கில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.11.2020ம் தேதியன்று காலை 08.00 மணி அளவில் பொன்குமார் த/பெ.குப்புச்சாமி (வயது 28) தாமரைப்பாடி, துங்காவி என்பவர் 14.11.2020ம் தேதியன்று மாலை 05.00 மணி அளவில் அடையாளம் தெரிந்த நபர்களால் இரும்பு தடியால் தாமரைப்பாடி வாய்க்கால் மேடு அருகே தாக்கியதாக சொல்லி முதலில் உடுமலை அரசு மருத்துவமனையில் அன்றைய தினமே முதலுதவி சிகிச்சை பெற்று எங்கள் மருத்துவமனைக்கு 15.11.2020ம் தேதி காலை 08.00 மணிக்கு சிகிச்சைக்கு வந்தார். அவரை பரிசோதித்ததில் அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது.

1. தலையில் காயம்

2. இடது மணிகட்டில் வீக்கம் மற்றும் வலி இருந்தது.

அவருக்கு CT ஸ்கேன் எடுக்கப்பட்டது தலையில் ரத்தக்கட்டு இருந்தது. இடது கையில் நுண் கதிர் எடுக்கப்பட்டு இடது மணிக்கட்டில் எலும்பு முறிவு காணப்பட்டது. அவரை உள்நோயாளியாக அனுமதித்து 19.11.2020 ம் தேதி வரை சிகிச்சை அளிக்கப்பட்டது. அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங் காயம் என்று சான்று வழங்கினேன். **காயச் சான்று அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) காயம்பட்டவர் என்னிடம் குறிப்பிட்டு எத்தனை நபர்கள் தாக்கியதாக சொல்லவில்லை என்றால் சரிதான். தலையில் என்ன வகையான எந்த அளவில் காயம் ஏற்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். கரடு, முரடான இடத்தில் கீழே தானாக விழுந்தாலும் இந்த காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். எனது மருத்துவமனையில் காயம்பட்டவர் அனுமதிக்கப்பட்டபோது அவருக்கு இருந்த காயங்கள் அடிப்படையில் சிகிச்சை அளித்தேன். உடுமலை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான ஆவணம் எதுவும் என்னிடம் கொடுக்கவில்லை.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2025.09.25 14:18:07 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்